LUXMI EDUCATION CENTRE
7,8,9
GCSE, GCE
MATHS, SCIENCE
ENGLISH, FRENCH
0208 573 0368

திருவருள்
சமூக சமய இலக்கிய விமர்சன இதழ்

LUXMI EDUCATION CENTRE
2,3,4,5 and 6
11+
101A Blyth Road
Hayes UB31DB

# மாடுண்டவர் மாட்டிக்கொண்டார்

## உங்களோடு சில நிமிடங்கள்.....

அன்பு வாசகர்களே!

திரும்பவும் திருவருள் வெளிவரத் தொடங்குகின்றது. பல வாசக நெஞ்சங்களின் வேண்டுகோளை ஏற்று திருவருள் புதிய பாணியில் புதிய வடிவில் வெளிவருகின்றது. சமயம் என்பது வெறுமனே நாயன்மார்களின் வரலாறு என்றும், ஆலயங்களில் புரியாத மொழியில் நடக்கும் பூசைகள் எனவும், வரையறுத்து இவற்றைப் போர்வைகளாகக் கொண்டு நடைபெறும் அநியாயங்களை வெளிக் கொணரவும் ஒரு களம் தேவைப்படுகின்றது. அந்தத் தேவையின் வெளிப்பாடே இந்தத் திருவருளின் உருமாற்றமும் வருகையும் ஆகும். நீங்கள் ஆலயங்களுக்குச் செல்லும்போது நடைபெறும் தில்லுமுல்லுகளை பயங்கொள்ளாமல் திருவருளுக்கு எழுதுங்கள். உங்கள் பெயர் வெளிவராமலே அவற்றைப் பிரசுரித்து மக்களுக்கு விழிப்புணர்ச்சியை உருவாக்க திருவருள் முன்னிற்கும். நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம். சமயம் தெரியாதவர்கள் எல்லாம் தமக்குச் சமயம் தெரியும் என்று அலட்டிக்கொண்டு திரியும் இக்காலத்தில் சரியான சமயத்தை உங்களுக்கு அடையாளம் காட்டுவதே திருவருளின் பணியாகும். இன்றைக்கு நாங்கள் விழித்துக் கொள்ளாவிட்டால் எங்கள் இளைய தலைமுறை எங்களை விட்டு நீண்டதூரம் சென்றுவிடும் என்பதை மறந்துவிடாதீர்கள்.

மு. நற்குணதயாளன்

தொடர்பு முகவரி:
THIRUVARUL
101A BLYTH ROAD
HAYES
UB31DB
TEL: 0208 573 0368

இலண்டனில் உள்ள ஆலயம் ஒன்றில் பக்தர் ஒருவருக்கு இப்படியான ஒரு இக்கட்டான நிலைமை நடந்தது. வழக்கம்போல் ஆலயத்துக்கு வழிபடச் சென்றார் அந்தப் ப்க்தர். ஆலயத்தில் பக்தர்கள் பலபேர் இருந்தார்கள். இந்தப் பக்தரோ அப்பாவி. எதையும் வெளிப் படையாகச் சொல்லி விடுவார். அதனால் வந்தது வினை. அந்தக் குறிப்பிட்ட ஆலயத்தின் தர்ம கர்தாவும் அங்கே இருந்தார். குரு மார்கள் பூசை செய்வதில் மும்முரமாக இருந்தனர். மக்கள் அரோகரா சொல்லிச் சொல்லி ஆண்டவனை வழிபட்டுக் கொண்டிருந்தனர். தர்மகர்த்தாவும் இரண்டு கரங்களையும் தலைமேல் குவித்து இறைவனை மனதார(!) வழிபட்டுக் கொண்டிருந்தார். அருகில் இந்தக் குறிப்பிட்ட பக்தர் நின்று கொண்டிருந்தார். இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்து புன்முறுவல் பூத்துக் கொண்டனர். அப்போதான் இந்தப்பக்தருக்கு ஒரு கணம் நினைவில் ஏதோ காட்சி



வந்து சென்றது. தர்மகர்த்தாவுக்கும் புரிந்து விட்டது. தர்மகர்த்தா மெதுவாக நகரத் தொடங்கினார். பக்தரும் விடவில்லை. அவரைத் தொடர்ந்து நகர்ந்தார். தர்மகர்த்தாவுக்குத் தர்ம சங்கடமாக இருந்தது. இருவரும் கடவுளை மறந்து விட்டார்கள். பூசை முடிந்து விட்டது. தர்மகர்த்தா வேறு சிலரோடு நின்று கதைத்துக் கொண்டிருக்க அருகில் சென்ற பக்தர் அவருக்கு அருகில் சென்று **அண்ணை நீங்கள் அப்பிடிச் செய்திருக்கக் கூடாது. அண்டைக்கே உங்களைப் பேசியிருப்பன். ஆனால் கோயிலிலை வைச்சுத்தான் சொல்ல வேண்டுமென்று வந்தனான்.** என்று பொரிந்து தள்ளினார். தர்மகர்த்தா வெல வெலத்துப் போனார். சுற்றிவரக் கோயிலுக்கு வந்த பக்கதர்கள். **ஒரு கோயிலின்ரை தர்ம கர்த்தாவாய் இருந்து கொண்டு எப்பிடி நீங்கள் மாட்டு இறைச்சி சாப்பிடுவியள். ஒண்டில் தர்மகர்த்தாவாக இருங்கோ இல்லை யெண்டால் சாதாரண மனிசர்மாதிரி எல்லாம் சாப்பிட்டுக் கொண்டிருங்கோ!** தர்மகர்த்தா மயங்காத குறை. அங்கு நின்ற மக்கள் எல்லாரும் முணுமுணுக்கத் தொடங்கினர்.

## டாட்டா காட்டும் பூசகர்கள்!

சில ஆலயங்களில் பூசகர்கள் கோயிலுக்கு ஒழுங்காக வருபவர்களுக்கு ஒழுங்காக டாட்டா காட்டுகிறார்கள். அவர்கள் ஏன் காட்டுகிறார்கள் என்பதல்ல எமது பிரச்சினை. எப்போ காட்டுகிறார்கள் என்பதே பிரச்சினையாக உள்ளது. ஒவ்வொரு பக்தரும் மனமாரப் பூசகரைக் குருவாக மதித்து இறைவனுக்கு அர்ச்சனை செய்விக்கிறார்கள். பூசகரும் மிகுந்த பக்தியோடு அர்ச்சனையை ஆரம்பிக்கிறார். இடையிலே அவருக்கு மிகப் பழக்கமான ஒருவர் ஆலயத்துக்குள் வருகிறார். உடனே பூசகர் மந்திரத்தை இடையிலே விட்டுத் தன் கண்களால் (புலனை விட்டு) அவரை வரவேற்பதோடு மட்டுமல்லாமல் கைகளைத் தூக்கி டாட்டாவும் காட்டுகிறார். பின்பு விட்ட இடத்தில் இருந்து தொடங்குகிறாரோ (யாருக்குத் தெரியும். விளங்காத மொழிதானே!) என்னவோ மந்திரத்தை மீண்டும் உச்சரிக்கத் தொடங்குகின்றார். பாவம் பக்தர். (கடவுளுக்கும் உனக்கும் இடையில் ஏனப்பா தரகர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கள்ளனும் முனிவனானான்!

சாவகச்சேரியூர்
டாக்டர் க. கதிர்காமநாதன்

உலகில் தலைவனாகவோ சீலனாகவோ அல்லது கள்வனாகவோ ஒருவரும் பிறப்பதில்லை. சமய சந்தர்ப்பங்களாலும் சூழ்நிலைகளாலும் இவர்கள் இப்படி ஆக்கப்படுகின்றனர்.

பிராமண குடும்பத்தில் பிறந்த இரத்திருகரன் என்ற இளைஞனுக்கு முதிய பெற்றோரும் பெரிய குடும்பமும் அமைந்திருந்தது. அவனால் எப்படி முயன்றும் குடும்பத்தைக் காப்பாற்ற முடியவில்லை. ஈற்றில் கொடிய வறுமையே வந்தது. தனது பெற்றோர்கள் மனைவி பிள்ளைகள் படும்பாட்டைக் கண்முன்கண்டு அவன் மனம் கலங்கினான். இந்தக் காலகட்டத்தில் நினையாப்பிரகாரமாய் கள்வர்கள் சிலரை அவன் சந்திக்க நேரிட்டது. அவர்களின் உல்லாச வாழ்க்கை அவனைப் பெரிதும் கவர்ந்தது. கள்வனாக மாறுவது வறுமையை ஒழிக்கும் என்று அவன் நம்பினான். மாறிவிட்டான். காட்டினூடாகச் செல்லும் செல்வந்தர்கள் வழிப்போக்கர்கள் பெண்மணிகள் யாவரையும் மறித்துப் பொருட்களை ஆரணங்களை சூறையாடி வாழத் தலைப்பட்டான். இதனால் பெற்றோரும் குடும்பமும் நன்றாக வாழத் தொடங்கினர். ஒரு நாள் இவனுக்குப் பொருளெதுவும் கிடைக்கவில்லை. அப்போது அந்த வழியால் முனிவர் ஒருவர் வந்து கொண்டிருந்தார். தன்னுடைய பிரச்சினைக்கு ஏதாவது வழி உண்டா என அவரிடம் கேட்டான். அவரும் பஞ்சாட்சர மந்திரத்தை மனதார ஓதினால் பலன் கிடைக்கும் என்று கூறிச் சென்றார். அவனும் தொடர்ச்சியாக 12 வருடங்கள் ஒரே இடத்திலிருந்து ஓதினான். அவனைச் சுற்றி கறையான் புற்றுக்களும் தோன்றிவிட்டன. அங்கு தோன்றிய நாரத முனிவர் அவரைப்பார்த்து வான்மீகி எனறழைத்தார். சமஸ்கிருதத்தில் கறையான் புற்றினை வால்மீகம் என்று கூறுவார்கள். இந்த வால்மீகி தான் அயோத்தியின் இராமயணத்தை இயற்றிய பெரும் புலவர்.

### அகங்காரம்

அகங்காரம் இருக்கும் வரையில் ஞானமும் முத்தியும் கை கூடாது. பிறப்பும் இறப்பும் இருந்தே தீரும்.

ஸ்ரீ ராமகிருஸ்ணர்

# ஆசை ஆரை விட்டது !!!!

லண்டன் மாநகரம் ஆலயங்களால் நிரம்பி வழிகின்றது. மாதம் ஒரு ஆலயம் என்று போட்டி போட்டுக்கொண்டு ஆரம்பிக்கிறார்கள். ஆலயங்கள் மக்களுக்காகத் தோற்றுவிக்கப்படாமல் ஒரு சிலரின் ஆசைக்காகவும் பெருமைக்காகவும் தோற்றுவிக்கப்படுகின்றன. பத்தோடு பதினொன்றாக சைவ முன்னேற்றச் சங்கம் சிதம்பரேஸ்வரர் ஆலயம் ஒன்றை உருவாக்கியுள்ளது. இந்த நாட்டில் ஆலயம் ஆரம்பிக்கக்கூடிய தகுதி சைவ முன்னேற்றச் சங்கத்துக்கு உண்டு. இதனை யாரும் மறுதலிக்கமுடியாது. ஆனால் சைவ முன்னேற்றச் சங்கம் ஒரு ஆலயத்தை அமைக்கும்போது அது சைவ நியதிகளுக்கு அமைவாக ஆரம்பிக்கப் படவேண்டும் என்கின்ற நியாயமான எதிர்பார்ப்பையும் கருத்திற் கொள்ளவேண்டும். ஆனால் எந்த வித்திலும் சைவ ஆகமங்களைக் கருத்திற் கொள்ளாது அவசர அவசரமாக ஆரம்பிக் கப்பட்டுள்ள இந்த ஆலயத்தினால் சைவ முன்னேற்றச் சங்கம் தன்னைத்தானே விமர்சனப் பக்கங்களுக்குள் கொண்டு வந்து விட்டது என்பது ஒரு கசப்பான நிகழ்வே. கனவில் சிதம்பரேஸ்வரர் வந்தார் என்றும் கேம்பிறிட்ஜில் எமக்காக அவர் காத்திருந்தார் என்றும் பல கதைகளை காரணங்களாக ஒப்பு வித்தாலும் தவறு தவறுதான் என்பதை சை.மு.ச ஒத்துக்கொண்டே ஆக வேண்டும். சைவ முன்னேற்றச் சங்கம் ஆலயவடயத்தில் ஒரு முன்னு தாரணமாகத் திகழவேண்டுமென்றே எதிர்பார்த்தோம். எதிர்பார்ப்பின்மேல் அவசர அவசரமக மண்ணள்ளிப் போடப்பட்டமை ஒரு பேரிடியே.

மூலஸ்தானம் என்பது கோயிலின் இதயம் என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயமே. இந்தவிடயத்தைக் கருத்திற கொள்ளாமல் கண்ணை மூடிக்கொண்டு அவசரப்பட்டி ருக்கிறார்கள். எப்படி இந்த அவசரம் நடந்து முடிந்துள்ளது. புரியவில்லை. இவையெல்லாம் 30 வருட சரித்திரம் கொண்ட சங்கத்துக்கு நல்லதல்ல. ஆலயம் அமைப்பது சேவையல்ல. அமைந்த ஆலயத்தில் தொண்டு புரிவதே சேவை. சேவை புரிவதற்காக ஆலயம் அமைக்க முனைவது நிரம்ப அடா வடித்தனம் என்றே கூறமுடியும். சமயத்தை மக்கள் மத்தியில் எடுத்துச் செல்லத் தோற்றுவிக்கப்பட்ட இச்சங்கம் இன்று ஆலய வியாபார சகதிக்குள் தன்னை மாட்டிக் கொண்டமை உண்மையிலேயே வேதனையைத் தருகின்றது. சம்பந்தப்பட்டவர்கள் இது சம்பந்தமாக ஆறஅமர இருந்து யோசனை செய்ய வேண்டுமென்று அன்போடு வேண்டிக் கொள்கின்றோம்.

# மதம் மாறினார் மரணம் அழைத்தது

அலி முஸ்ராவ் மகமில் எனும் 22 வயதுப் பள்ளிமாணவன் தலையில் சுடப்பட்டு மரணமானான். இந்த மாணவன் பதினொரு மாதங்களுக்கு முன்பு இஸ்லாமிய மதத்திலிருந்து கிறிஸ்தவ மதத்துக்கு மாறிமிருந்தான். சந்திர கிரகணம் ஏற்பட்டபோது இஸ்லாமிய மக்களுடன் சேர்ந்து வழிபாடு செய்யாதமைக்காக ஒரு சோமாலிய இஸ்லாமிய மத விசுவாசியால் சுடப்பட்டான். இஸ்லாமிய மதத்தினருக்கு சந்திர கிரகண வழிபாடு மிகமிக முக்கியமான ஒன்றாகும்.

# பொன்னாடைகள் வாழ்க!!

லண்டன் மாநகரில் பொன்னாடைக் கலாசாரம் வேகமாகப் பரவி வருகின்றது. ஒரு காலத்தில் பொன்னாடை போர்த்துபவரும் பொன்னாடை பெற்றுக் கொள்பராகவும் செயற்கரிய செயல் செய்து மதிக்கப்படக் கூடியவர்களாகவே இருந்தனர். ஆனால் இன்று அப்படி இல்லை. இந்தியா செல்கின்ற நம்மவர்களில் பலர் முதலில் வாங்கி அடுக்குவது பொன்னாடைகளே. அதுவும் மிகவும் மலிவான பொன்னாடைகளைத் தேடிப் பிடித்து வாங்குகிறார்கள். ஒரு நிகழ்ச்சியில் லண்டனைச் சேர்ந்த பிரமுகர் அரங்கேற்ற நிகழ்வுக்கு பத்துப் பொன்னாடைகளோடு வந்து சேர்ந்தார். துரதிஸ்டவசமாக மேடையிலே பதினொருபேர்கள் இருந்தனர். உடனே மேடையின் பின்பகுதியில் கருமமாற்றிக் கொண்டிருந்த இன்னொருவரின் சால்வையை இழுத்தெடுத்துப் போற்றிவிட்டுப் போய்விட்டார். தேவையா இது?
(ரொம்பக் கேவலம்!!!!!!)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோயில் அமைப்பு

## க. கணேசலிங்கம்

சைவக் கோயில்களைச் சைவ ஆகமங்கள் கூறும் விதிமுறைகளின்படி அமைத்தல் மரபு. கோயில் அமைக்கப்பெறும் இடத்தைத் தேர்ந்தெடுத்தல் நிலத்தை அகழ்ந்தபின் செய்யவேண்டிய கிரியைகள் கோயிலின் அமைப்பு முறை இறை மூர்த்தங்கள் எழுந்தருளும் இடங்கள் அவற்றை எழுந்தருளச் செய்யும் கிரியை முறைகள் ஆகிய பல செய்திகளை ஆகமங்களில் காணலாம். இவற்றை அறிந்த சிவாச்சாரியார், சிற்பக் கலைஞர், அறிஞர் ஆகியோரின் துணையுடன் கோயில்கள் அமைக்கப்படவேண்டியது மிகமிக அவசியமாகும்.

உடம்பில் உயிர் விளங்குவதுபோன்று திருக்கோயில்களில் இறைவன் விளங்குகின்றான். ஒருவகையில் பார்த்தால் மனித உடல் போன்றே ஆலயங்கள் அமைந்துள்ளதைக் காணலாம். கோயிலின் மூலஸ்தானம் அல்லது கர்ப்பக்கிரகம் என்று கூறப்படும் கருவறை இறைவன் அருள் சுரக்கும் திருவுருவம் கொண்ட இடம். இது மனித உடம்பிலுள்ள தலை எனக் கொள்ளலாம். இதுபோல்

அர்த்தமண்டபம் - கழுத்து

மகாமண்டபம் - மார்பு,

யாகசாலை - நாபி,

ஸ்தப மண்டபம் - தொடை, அல்லது உடலின் கீழ்ப்பாகம்,

கோபுரம்-வாய்,

நந்தி- நாக்கு,

கொடிமரம் - உள்நாக்கு,

தீபங்கள் - இந்திரியங்கள்,

கருவறை - இதயம்,

சிவலிங்கம் - உயிர்

என்று ஒப்பிடுவதுமுண்டு.

கருவறையின் மேலுள்ள விமானம் மேலே போகப்போகக் குறுகி இருக்கும். உலகப் பற்றைச் சிறிது சிறிதாகவிட்டு இறையருளை நோக்கி ஆன்மா வளர்வதை இது உணர்த்துகின்றது. விமானத்தின் மேலுள்ள குடம்போன்ற கலசம் திருவருள் வெளியில் ஆன்மா ஒன்றித் திளைப்பதைக்குறிக்கும். கருவறையிலுள்ள மூலமூர்த்தி கருங்கல்லால் ஆனது. சிவன் கோயிலில் இலிங்கமும் பிற கோயில்களில் அக் கோயில்களின் பெயருக்கேற்ற இறைமூர்த்தங்களும் மூலமூர்த்திகளாக இருக்கும். திருவிழா நாளில் உலாவரும் உற்சவ மூர்த்தி மகாமண்டபத்தில் உள்ளது. இது பஞ்சலோகங்களால் செய்யப்பட்டது. இறைவனின் ஐந்தொழில் அல்லது பஞ்ச கிருத்தியங்களுக்குரிய ஆற்றலைக் குறிப்பது இந்தப் பஞ்சலோகங்கள்.

ஸ்தப மண்டபத்தில் மூன்று முக்கிய உருவங்கள் உள்ளன. நந்திதேவர், பலிபீடம், கொடிமரம் ஆகியவை இவை. நந்தியும் பலிபீடமும் கருங்கற்களால் ஆனவை. கருவறையிலுள்ள மூலமூர்த்தியும் நந்தியும் பலிபீடமும் முறையே பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருளைக் குறிப்பன. இங்குள்ள நந்திதேவர் பரிசுத்தமடைந்த ஆன்மாவைக் குறிப்பது. கோயிலில் சென்று கும்பிடும்போது எமது பாசம் நீங்குவதைப் பலிபீடமும் இறைவனை அடைதலையே உயிர் அறமாகக் கொள்ள வேண்டுமென்பதை நந்தியும் என்றும் அருள் செய்யும் இறைவனைத் துதித்து அவனை அடைய வேண்டுமென்பதை மூலமூர்த்தியும் உணர்த்துகின்றன. சிவன் கோயில்களில் நந்தி இருப்பது போன்று பிற கோயில்களில் அவற்றின் மூலமூர்த்தியுடன் தொடர்பான வடிவும் இருக்கும்.

கோயிலிலுள்ள கொடிமரம் பதியையும் கொடிச்சீலை பசுவையும் தர்ப்பக்கயிறு பாசத்தையும் குறிக்கும். ஆன்மா பாசத்திலிருந்து நீங்கி இறையருள் வழி நின்று மேல்நிலையான முத்தியடைவதைக் குறிப்பது கொடியேற்றவிழா. கொடிமரத்தில் ஆறு வட்டவடிவான முடிச்சுகள், சமதூர இடைவெளியில் உள்ளன. இந்த முடிச்சுகள் உடம்பிலுள்ள ஆறு ஆதாரங்களைக் குறிப்பன. கொடிமரத்தை நடு நாடியான சுழுமுனையைக்கொண்டு ஆறு முடிச்சுகள் குறிக்கும் ஆறு ஆதாரங்கள் வழியாகக் குண்டலினி சக்தியை எழுப்பி இறைவனுடன் ஒன்றும் யோக நெறியையும் கொடிமரம் குறிக்கின்றது.

(இன்னும் வரும்...)

## உண்மை

கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாமென்பது ஆன்றோர்வாக்காக இருந்தாலும் கோயில்கள் இப்படித்தான் அமைக்கப்படல் வேண்டும் என்பது முக்கியமானதென மேலுள்ள கட்டுரை கூறி நிற்கின்றது. ஆனால் லண்டன் மாநகரில் பல ஆலயங்கள் வெறும் மண்டப வழிபாட்டு நிலைகளாகவே உள்ளன. அவற்றை மண்டப வழிபாட்டு நிலைகள் என்று கூறிக்கொண்டால் யாரும் கவலைப்படப் போவதில்லை. பதிலாக அவற்றை சந்நிதி என்றும் ஆலயம் என்றும் சொல்வது சரியானதாகப்படவில்லை. இப்படியான செயற்பாடுகளால்தான் இன்று தமிழகத்தில்கூட குஸ்புவுக்கும் நமீதாவுக்கும் ஆலயம் கட்டத்தொடங்கியுள்ளார்கள். இந்த நிலை பல்லாயிரம் ஆண்டு வரலாற்றினைக் கொண்ட எங்கள் கலாசாரத்திற்கு ஒரு அவமானநிலையை வருவிக்கின்றது என்பதனை நாம் மறந்துவிடக் கூடாது. புலம் பெயர்ந்த நாடுகளில் நாம் நெருப்பின்மேல் நிற்கின்றோம் என்பதை தயவு செய்து இந்த ஆலய முதலீட்டாளர்கள் மனதிற் கொள்ளவேண்டும்.

**வாசகர்களே! உங்கள் அபிப்பிராயங்களை எழுதுங்கள். காத்திருக்கிறோம்.**

**ஆசிரியர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு பக்கத்தில் இரு வாதங்கள்

## கடவுளா எங்கே?

என்னைப்பற்றிச் சொல்ல வேண்டுமானால் கடவுள் என்று ஒருவர் இருக்கிறார் என்றோ இல்லை யென்றோ சொல்ல முன்வரவில்லை. அதுபோலவே நீங்கள் அனைவரும் என் பேச்சைக் கேட்டுத்தான் ஆகவேண்டுமென்றும் கூறவில்லை.

உண்மையில் கடவுள் இருக்கிறார் என்று சொல்லிக் கொள்ள ஒரு அறிவாளி தேவையில்லை. ஒரு முட்டாளேபோதும். ஆனால் கடவுள் இல்லையென்று மறுத்துக்கூற ஒரு அறிவாளியால்தான் முடியும். உலகில் இன்று கடவுள் நம்பிக்கை இல்லாதவர்கள் 100 கோடி மக்கள் இருப்பார்கள். கடவுள் நம்பிக்கை உள்ளவர்கள் 100 கோடியைவிடக் கூடுத லாகவே உள்ளனர்.

ஏனைய மதத்தவர்களுக்கெல்லாம் ஒரு கடவுள் என்றால் எமக்கு மட்டும் எத்த னையாயிரம் கடவுள்கள். அவர்களின் பெயர்களை எழுத ஆரம்பித்தால் பேனாவின் மைதான் தீர்ந்து விடும். ஆனால் பெயர்களின் வரிசை முடிந்து விடாது. யாராவது ஒரு பார்ப்பானைக் கேளுங்கள் எப்படி அந்தக் கடவுள்கள் ஏற்பட்டன? எப்போது? எங்கே என்று. கோடிக் கணக்கிலா நமக்குக் கடவுள்கள் இருப்பது? நாங்கள் தலையெடுத்து இதையெல்லாம் கேட்காமல் விட்டிருந்தால் மைல்கற்கள் பர்லாங்குக் கற்கள் எல்லாம் கடவுள்களாகி இருக்குமே! படுத்திருக்கிற அம்மிக்கல்லை எடுத்து நிறுத்தி வைத்துக் குங்குமம், மஞ்சள் பூசி விட்டால் அதுவும் ஒரு கடவுள். இதையெல்லாம் யார் கேட்கிறார்கள்? இதைப் பற்றி நீங்கள் சிறிதளவாவது சிந்தித்துப் பார்க்க வேண்டாமா?

யானை, பன்றி, மீன், காக்கை, எருமை, பாம்பு எல்லாம நமக்குக் கடவுள். புற்றைக் கண்டால் பால் ஊற்றுகிறான். கழுகு ஆகாயத்தில் பறந்தால் கன்னத்தில் அடித்துக் கொள்கிறான். மாட்டைப் பார்த்தால் கும்பிடுகிறான். ஒரு கடவுளுக்கு யானை முகம், இன்னொரு கடவுளுக்கு மூன்று முகம், இன்னொரு கடவுளுக்கு 10 முகம், இன்னொரு கடவுள் ஆயிரம் ஆயிரம் தலையுடையாள். இன்னொரு கடவுளுக்கு இரண்டாயிரம் கைகள். இவற்றின் அர்த்தம்தான் என்ன? எதையும் சிந்திக்கும் குணம் நமக்கு வேண்டும். அக்குணம் இல்லாததால்தான் மற்ற நாடு களில் உள்ள முன்னேற்றம் எங்கள் நாடு களில் ஏற்படவில்லை. யார் எதைச் சொன்னாலும் காது கொடுத்துக் கேட்கவேண்டும். சிந்தித்து உண் மையைக் கண்டறிவதுதான் அறிவு டமைக்கு அடையாளம். சிந்தித்தால் பாவம் என்று ஒரு கூட்டம் எம்மை அடக்கி வைத்துள்ளது. எதுவானாலும் ஆராய வேண்டும். கடவுள் சாஸ்திரம் புராணம் இதிகாசம் முதலியவற்றை ஆராய்வதில் நம் அறிவு பயன் படுத்தப்படுவதில்லை..

சொந்த அறிவை உபயோகித்தால் உபயோகித்தவன் நாஸ்திகன். உண்மையில் கடவுள் துறையில் நாங்கள் காட்டு மிராண்டிகளாகி விட்டோம். பார்ப்பான் சாதியைக் கரைத்துத் தந்தால் பேசாமல் வாங்கிக் குடித்து விடுகின்றோம். அறிவு சம்பந்தப்பட்ட வகையிலும் இன்னும் நாங்கள் காட்டு மிராண்டிகளாகவே வாழ்கின் றோம்.

– பகுத்தறிவாளன்– நன்றி: yarl.com

### அகங்காரம்

ஆகாயத்தில் மேகங்கள் தோன்றிச் சூரியனை மறைக்குமானால் அதன் பிரகாசமும் மறைந்துபோகும். அது போல மனத்தில் அகங்காரம் இருக்கும் வரையில் அதில் ஈஸ்வர ஜோதி பிரகாசிக்காது.

–ஸ்ரீ ராமகிருஸ்ண பரமஹம்சர்–

## கடவுளா இங்கே!

இந்தப் பிரபஞ்சத்தின் அடிப்படை மூலங்களான இலத்திரன் நியூட்ரன் புரோட்டன் போன்ற துகள்களைச் சுக்கு நூறாய் கோடி கோடியாய்த் தூள் தூளாக்கும் போது ஒரு ஒன்றுமில்லாத சூன்யம் மிஞ்சி நிற்கும். அந்த ஒன்றுமில்லாச் சூன்யத்திலிருந்து தோன்றியது தான் இந்தப் பிரபஞ்சமும் நாமும். அந்தச் சூன்யமே கடவுள். அவனே நம்மை ஆக்கிய சிருஸ்டிகர்த்தா. அவனை நம்பாமல் இருக்க முடியாது. ஏனெனில் காரணமின்றிக் காரியமில்லை. அந்தச் சூன்யன் அனுபவப் பொருளாவானேயன்றி எமது மூளையால் கிரகிக்கக்கூடியவனல்ல.

அவனை அனுபவிக்க அந்த ஒன்றுமில்லாச் சூனியத்திற்குள் செல்லவேண்டும். அது எங்கேயிருக்கிறது தெரியுமா? சித் அம்பரவெளியில் (சிதம்பரவெளி) அதாவது சித்தாகாசத்தில் இருக்கிறது. அதாவது உங்கள் உள்ளத்தினுள்ளே தன்னுணர்வைக் கடந்து செல்லும்போது அச் சூனியத்தை அனுபவிக்க முடியும். கடவுளைப் பற்றி உங்கள் மூளை வைத்திருக்கும் கருது கோள்களையெல்லாம் தூக்கி எறிந்துவிட்டு அச்சூனிய வெளியுள் செல்லுங்கள் உள்ளே. அங்குதான் கட வுளைக் காணலாம் அல்லது அனுபவிக்கலாம். அந்த அனுபவத்திற்கு எல்லையேயில்லை. ஆதியந்தமில்லா அரும் பெரும் சோதியாய் அவன் மிளிர்கிறான். நோக்கரிய நோக்காய் நுணுக்கரிய நுண்ணுணர்வாய் போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனாய் அவன் அங்கே உள்ளானய்யா. சத்தியமாய்ச் சொல்லிறேன் அவன் அங்கேயுள்ளான் அனுபவித்துப்பாரும். கடவுளென்றால் யாரென்று சிந்தியாமல் சும்மா சமயங்கள் கூறும் தெய்வங்களைப் பற்றி வேண்டுமானால் முட்டாள்களோடு பொழுதுபோக்காக வாதிட்டுக் கொண்டிருக்கலாம். ஆனால் அது எல்லாரிடமும் செல்லாது. பூஜ்ஜியத்துக்குள்ளேயொரு ராஜ்ஜியத்தை ஆண்டுகொண்டு புரியாமலே இருப்பான் ஒருவன். அவனைப் புரிந்து கொண்டால் அவன்தான் இறைவன்.

S.K.Rajah நன்றி: yarl.com

### ஒரு கருத்து....

இறைவனைப் பற்றிய வாதப்பிரதிவாதங்கள் ஏராளம். இல்லையென்பவர்களும் இருக்கு என்பவர்களும் பலபேர். இந்தப் பக்கம் இப்படி முரண்பட்ட வாதங்களுக்காக உருவாக்கப்பட்டுள்ளது. இந்தப் பக் கங்களில் வாசகர்களாகிய நீங்கள் கலந்துகொள்ளலாம். இவை வெறுமனே வாதத்துக்காகவல்ல உண்மைகளை வெளிக்கொணரும் முயற்சியே இது. பங்குபற்றுங்கள் களம் தாத் திருவருள் காத்திருக்கின்றது. ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரோக்கியம்

மனித உறவுகள் நிறையவே மாறிப்போய்விட்டன. படுமோசமான நிலைக்கு மாறிப்போய்விட்டன. எல்லாப் பரிமாணங்களிலும் ஆழ்ந்த உறவுகள் காணாமல் போய்விட்டன.

மனைவி மனைவியாக இல்லை. அவள் ஒரு கேர்ள் பிரண்ட்டா மாறிப்போனாள். கணவன் கணவனாக இல்லை. அவன் வெறும் போய் பிரண்டாக மாறியுள்ளான்.

நட்பு நல்லதுதான். ஆனால் அது ஆழமானது அன்று. திருமணம்தான் ஓரளவு ஆழத்தில் நிகழ்வது. ஆழ்ந்த பொறுப்புணர்வு அது. அந்தப் பொறுப்புணர்வை ஏற்காதவரை நீங்கள் உள்ளீடற்றவராகத்தான் இருக்கமுடியும். பொறுப்புணர்வு ஏற்காதவரை உங்களால் தாவிக்குதிக்க முடியாது. மேல் மட்டத்தில்தான் மிதந்து கொண்டிருக்கமுடியும். ஆழங்களுக்குள் செல்ல முடியாது.ஆழங்களுக்கள் செல்வது ஆபத்தானதுதான். அப்படித்தானே இருக்கமுடியும்.

காரணம் மேல்மட்டத்தில் நீங்கள் மிகத் திறமையுடன் செயற்படுவீர்கள். மேல் மட்டத்தில் ஒரு தானியங்கி போல நீங்கள் செயற்படுவீர்கள். அதற்கு விழிப்புணர்வே தேவையில்லை.

ஆனால் ஆழங்களில் செல்லச் செல்ல நீங்கள் மிகமிகத் தயார்நிலையில் இருக்கவேண்டியுள்ளது. ஏனென்றால் ஒவ்வொரு கணத்திலும் மரணம் நிகழ்ந்துவிடக் கூடும்.

ஆழம்பற்றிள அச்சமே எல்லா உறவுகளிலும் உள்ளீடற்ற தன்மையை உருவாக்கிவிடுகின்றது. அவர்கள் வெறும் விடலைகள் ஆகிவிடுகின்றார்கள். பாய்பிரண்ட, கேர்ள்பிரண்ட் என்ற உறவுகள் எல்லாம் மகிழ்ச்சி தருவனவாக இருக்கலாம். ஆனால் அது, ஒவ்வொரு வருக்குள்ளும் ஆழமாய் மறைந்து கிடக்கும் பிரதேசத்திற்கான கதவாக ஆக வழியில்லை.

ஒரு கேர்ள்பிரண்டுடன் உடலுறவுத் தொடர்பு கொண்டிருக்கலாம்.ஆனால், அங்கே காதல் வளராது. காதலுக்கு ஆழ்ந்த வேர்கள் தேவை.

காமம் மேல்மட்டத்தில் மட்டுமே சாத்தியம் காமம் உடல் ரீதியானது. அது மிருகத்தனமானது. ஆழ்ந்த காதலின் பகுதியாக எழுமானால் காமம் இனியதுதான். காதலின் பகுதியாக அமையாதபோது அதுவே மகா அசிங்கமாகிவிடுகின்றது. காரணம், அதில் மனக்கலப்பு இருப்பதில்லை. சும்மா தொட்டுக் கொள்வதும் பிரிந்து விடுவதுமாக இருக்கும். அங்கே உடல்கள் மட்டுமே சந்திக்கின்றன. நீயும் நானும் நாம் ஆவதில்லை. எல்லா உறவுகளிலும் இதுதான் ஏற்படுகின்றது. மாபெரும் உறவு மறைந்தே போய்விட்டது. மாபெரும் உறவு என்பது குருவுக்கும் சீடனுக்கும் உள்ள உறவுதான். குருவுக்கும் சீடனுக்கும் இடையில் ஏற்படும் உறவின் பரிமாணத்தைப் புரிந்து கொள்ளாதவரை, இறைவனைப் புரிந்து கொள்ள முடியாது. அது அடியோடு மறைந்து போய்விட்டது. மனைவிக்கு மாற்றாக கேர்ள் பிரண்ட் . கணவனுக்கு மாற்றாக பாய் பிரண்ட் கிடைத்து விடுகிறார்கள். ஆனால் குரு சீடன் உறவுக்கு மாற்றே இல்லாமல் போய் அது மறைந்தே போய்விட்டது.

இதற்கு மாறாக ஏதாவது இருக்கி றதென்றால் அது முற்றிலும் மாறுபட்ட உளவியல் மருத்துவர்– நோயாளி உறவாக இருக்கின்றது.

இது உடல் நலம் மன நலம் குன்றியதால் ஏற்படும் உறவு. நோயாளி நாடிவருவது உண்மை தேடி அன்று. சொல்லப்போனால் உடல் நலம் நாடிக்கூட அன்று.

ஆரோக்கியம் என்ற சொல் பொருள் பொதிந்தது. இது முழுமையைச் சுட்டுவது. சுயம் குணப்படுதல் பற்றிய ஆழமான புனிதமான சொல் இது.

ஆரோக்கியம் நாடி நோயாளி வருவதில்லை. அவ்வாறு வந்தால் அவனே சீடன்.

நோயாளி வருவது நோய் நீக்கவே. இது முற்றிலும் எதிர் மறையான போக்கு. அவன் வருவது மறுபடியும் பழையபடி ஆவதற்காகவே. சாதாரணமாக உலகின் உழைப்புப் பகுதியாக மாறிவிடவே அவன் வருகின்றான்.

அவனது ஒழுங்கு சீர் குலைந்து விட்டது. அதற்கு உளவியல் மருத்துவர் உதவுவார். சரி செய்து விடுவார். அவ்வளவுதான். சரி செய்வது யாருக்காக? உலகிற்காக சமூகத்திற்காக. அது எப்படி இருக்கிறது? பூரண நோய் கொண்டதாக.

சாதாரணமான இயல்பான மனிதர் என்று உங்களால் குறிப்பிடப்படுகின்றவர். இயல்பான நோய் கொண்ட மனிதர். இயல்பான பைத்தியம் இயல்பான கிறுக்கர்.

இந்த இயல்பான மனிதர் புத்தி பேதலித்தவர். ஓர் எல்லைக்குள் இருப்பவர். அந்த எல்லைவேலி சமுதாயத் தினாலும் பண்பாட்டினாலும். ஒப்புக்கொள் ளப்பட்ட ஒன்று.

சில சமயம் சிலர் அந்த வேலிகளைக் கடந்து வெளியே போய்விடுவார்கள். அப்படிப்பட்டவர்களை சமூகம் நோயாளி என்ற முத்திரை குத்தி விடுகிறது. உடனே உளவியல் மருத்துவர்கள் அவர்களைக் கும்பலுக்கு உள்ளே தள்ளிவிட முயல்கின்றார்கள். அந்த மருத்துவர்கள் அந்த எல்லைக் கோட்டினுள் இருக்கிறார்கள்.

உளவியல் மருத்துவர்கள் குருவாக முடியாது. காரணம் அவர்கள் முழுமையானவர்கள் இல்லை. நோயாளியும் சீடனாக முடியாது. காரணம் அவன் கற்பதற்கு வரவில்லை. அவன் நிலை தடுமாறிப்போனவன். தான் தொல்லைப்படுத்தப்படுவதையும் விரும் பாதவன். அவனது முயற்சி எல்லாம் சரிக்கட்டிக் கொள்வதிலேயே இருக்கிறது. ஆரோக்கியம் பற்றி அவன் அக்கறை தெளிவற்றதாகவே இருக்கிறது.

**ஓஷோ**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தில்லை நடராசர் திருக்கோவிலில் கோவிந்தராசப் பெருமான் இடம்பெற்ற வரலாறு

செந்தமிழ் நூல்களிலும் வடமொழி நூல்களிலும் தில்லைப் பெருங்கோயில் சைவ சமயத்தாருக்குச் சிறப்புரி மையுடைய தலைமைக் கோயிலாகவே போற்றப்பெற்றுள்ளது. வியாக்கிர பாதராகிய புலிக்கால் முனிவர் திரமூலட்டானப் பெருமானை வழிபட்டுப் போற்றின மையால் பெரும் பற்றப் புலியூர் எனவும் தில்லைவனமாகிய இத் திருத்தலத்திலே பதஞ்சலி முனிவர் செய்த தவத்திற்கு அருள் கூர்ந்து எல்லாம் வல்ல சிவபெருமான் ஞானமயமான அம்ப லத்திலே ஆனந்தக் கூத்து நிகழ்த்திய ருளுதலால் தில்லைச் சிற்றம்பலம் எனவும் வழங்கப்பெறுவது இத் தில்லைப் பெருங்கோயிலாகும். திருஞான சம்பந்தர் , திருநாவுக்கரசர் , சுந்தரர் ஆகிய மூவரும் அருளிய தேவாரத் திருப்பதிகங்களும் மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம், திருச் சிற்றம்பலக் கோவையாகிய அருள் நூல்களும் திருமூலர் திருமந்திரம் முதல் திருத் தொண்டர் புராணம் ஈறாகவுள்ள ஏனைய திருமுறைகளும் தில்லைச் சிற்றம்ப லத்தையே சிவ தலங்களெல்லாவற்றிலும் முதன்மையுடையதாகக் கொண்டு கோயில் என்னும் பெயராற் சிறப்பித்துப் போற்றியுள்ளன. சேரசோழ பாண்டியர்க ளாகிய தமிழ் வேந்தர் ஆட்சியிலும் இடைக்காலத்தில் வந்த விசயநகர மன்னர் நாயக்க மன்னர் மராட்டிய மன்னர் ஆட்சியிலும் தில்லைப் பெருங்கோயில் கூத்தப் பெருமானுக்குரிய திருக் கோயிலாகவே கல்வெட்டுக்களிற் குறிக்கப் பெற்றுள்ளது. இத் திருக்கோயிலின் ஆட்சியுரிமைகள் அனைத்தும் சிவ னடியார்களாகிய மாகேஸ்வரர்களுக்கும் கோயிலில் ஸ்ரீ காரயமாகிய அகத் தொண்டு புரிந்து வரும் தில்லைவாழ் அந்தணர் முதலியோர்க்கும் கோயில் நாயகஞ் செய்வார் ஆகிய அரசியல திகாரிகட்கும் சமுதாயப் பணி செய்வாராகிய ஊர்ப் பொது மக்களுக்கும் உரியனவாகக் கோயிலில் வரையப்பெற்ற கல்வெட்டுக்களில் இக் கோயில் உடையார் திருச் சிற்றம்பல முடை யாராகிய பொன்னம்பலவாணர்க்குச் சிறப்புரிமையுடைய திருக் கோயிலாகக் குறிக்கப் பெற்றுள்மையைக் காணலாம்.

(இன்னும் வரும்......)

# குற்றாலம் பூங்காவில் வள்ளுவர், அகத்தியர், கம்பர் சிலைகள் உடைப்பு



குற்றாலம் பூங்காவில் அமைக்கப் பட்டிருந்த திருவள்ளுவர், அகத்தியர், கம்பர் போன்ற தமிழ் புலவர்களின் சிலைகளை சில விஷமிகள் அடித்து நொறுக்கியுள்ளனர். குற்றாலத்தில் உள்ள விஸ்வநாதராவ் பூங்காவில் உள்ள தடாகத்தில் சுற்றுலாப் பயணிகளையும் சிறுவர்களையும் கவருவதற்காக 3 லட்சம் செலவில் சேர சோழ பாண்டிய மன்னர்களின் சிலைகள் கம்பர் இளங்கோவடிகள் வள்ளுவர் தமிழ ன்னை சிலைகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் நள்ளிரவு சுமார் 20 பேர் கொண்ட கும்பல் திடீரென பூங்காவினுள் நுழைந்து அகத்தியர் வள்ளுவர் தொல்காப்பியர் ஆகிய மூவரின் சிலைகளில் உள்ள கைகளை மட்டும் உடைத்துச் சேதப்படுத்தியுள்ளனர்.

---

# துளசிச் செடியின் மகிமை

துளசி அனைத்து பக்தி தொண்டு களின் சாரம்.

துளசி இலை பூ, வேர்கள், கிளைகள், நிழல் எல்லாம் ஆன்மீகமானவை. பக்தியுடன் துளசியின் இலையை கிருஷ்ணருக்கு அளிப்பவர் அவர் அருகிலேயே வாழ்வர்.

துளசியின் மண்ணை எடுத்து உடலில் பூசிக்கொண்டு ஸ்ரீ கிருஷ் ணரை வணங்குபவர், ஒவ்வொரு நாளும் நூறு நாள் பூஜை செய்த பயனை அடைவர்.



துளசி மஞ்சரியை கிருஷ்ணருக்கு அளிப் பவர் மற்ற எல்லா புஷ்பங்களையும் அளி த்த பலனைப் பெறுவர். ஒருவர் துள சியைப் பார்த்தாலோ, அல் லது அது இருக்கும் வீட்டிற்கோ, தோட்டத்திற்கோ சென்றால் அவர் ஒரு பிராமணனைக் கொன்ற பாவத்தில் இருந்தும் கூட, விடுதலை பெறுகிறான். துளசி உள்ள காடுகள் வீடுகள் ஆகிய இடங்களில் கிருஷ்ணர் ஆனந்தமாக வசிக்கிறார். துளசி உள்ள வீடுகள் எந்தக் கேடான காலத்திலும் வீழ்ச்சி அடையாது. அதுவும் அல்லாமல் எல்லாப் புனித ஸ்தலங்களிலும் புனிதமானது.

துளசியின் வாசனை முகர்ந்து பார்க்கும் அனைவரையும் தூய்மையாக்கும். துளசி உள்ள இடங்களில் கிருஷ்ணரும் மற்ற எல்லா தெய்வங்களும் வசிப்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிவுக்கான ஒரு முடிவு

முடிவு எடுக்கப்படுதல் என்பது வாழ்க்கையில் மிகப்பிரதானமான ஒன்று. பிரச்சினைகள் இல்லாமல் வாழ்க்கை இல்லை. அப்பாடா பிரச்சினைகள் முடிந்து விட்டதே என்று நெட்டி முறிக்கும்போது எம்மை அறியாமலேயே அடுத்த பிரச்சினைகள் ஆரம்பமாகி விடுகின்றன. ஆனால் எந்தப் பிரச்சி னைக்கும் ஒரு நியாயமான முடிவு இருக்கவே செய்கின்றது. முடிவு எடுக்காமல் பிரச்சினைகளை முடிக்கவே முடியாது. ஒரு முடிவிலிருந்துதான் அடுத்த முடிவுக்கான ஆரம்பம் ஆரம்பமாகின்றது.

கீழே வருகின்ற கதையும் இதையே சொல்லி நிற்கின்றது.

மன்னன் ஒருவன் தன் சகாக்களோடு நகரைச் சுற்றி வந்தான். அப்போது ஒரு துறவியைச் சந்தித்தான். எனக்கு நூறு வெள்ளிகளை யார் தருகிறார்களோ அவர்களுக்கு நான் நல்ல அறிவுரை சொல்வேன் என்றார் துறவி. அந்த நூறு வெள்ளிக்குரிய அறிவுரை என்னவென்று மன்னன் கேட்டான். அரசே எனக்கு பணத்தைத் தர உத்தரவிடுங்கள் என்றான் துறவி. மன்னனும் நூறு வெள்ளி அளிக்க உத்தரவிட்டான். வித்தியாசமாக துறவி ஏதும் சொல்லப்போகிறார் என்று எல்லோரும் ஆவலாயிருக்க முடிவு எப்படி இருக்கும் என்று யோசிக்காமல் எதையும் தொடங்காதே. இது தான் என் அறிவுரை என்றான் துறவி.

அதைக் கேட்டதும் மன்னனுடன் சென்றிருந்த அனைவரும் விழுந்து விழுந்து சிரித்தனர். சிரித்தவுடன் நிறுத்தாமல் துறவி புத்திசாலி தொகையை முதலிலேயே வாங்கிவிட்டார் என்று பரிகாசமும் செய்தனர். மன்னனோ துறவி நல்ல அறிவுரைதான் வழங்கி இருக்கிறார் என்றான். அதை எப்போதும் மனதில் சைத்துக் கொள்வதற்காக எல்லா இடங்களிலும் எழுத உத்தரவிட்டான் மன்னன். சாப்பிடும் வெள்ளித் தட்டில்கூட அந்த வாசகம் பொறிக்கப்பட்டது. அந்த சமயம் சதிகாரன் ஒருவன் மன்னனைக் கொன்று அரசை கைப்பற்றத் திட்டமிட்டான். அதன்படி மன்னனின் மருத்துவரிடம் சென்று மன்னனிடம் இருந்து இரத்தம் எடுக்கும் பொழுது விஷம் தடவிய கத்தியை உபயோகித்தால் மன்னன் இறந்துவிடுவான் . நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும் உங்களை பிரதம மந்திரி ஆக்குவேன் என்று ஆசை வார்த்தை கூறி அவரைச் சதியில் சேர்த்துக் கொண்டான்.

மன்னனின் இரத்தம் எடுக்கும்வேளை வந்தது. இரத்தத்தைப் பிடிக்க அடியில் ஒரு தட்டு வைக்கப்பட்டது. அந்தத் தட்டில் ஏதோ எழுதி இருக்க மருத்துவன் என்ன எழுதி இருக்கும் என்று அதை உற்றுப் பார்த்தார்.

முடிவு எப்படி இருக்கும் என்று யோசிக்காமல் எந்த செயலையும் தொடராதே என்ற வாசகம் எழுதி இருந்ததை மருத்துவர் படித்தார். அரசனையே கொல்லத் துணிந்த இந்த சதிகாரன் நாளை என்னையே கொல்லாமல் விடுவான் என்பது என்ன நிச்சயம் என்று உணர்ந்ததும் மருத்துவர் அஞ்சினார். மருத்துவர் அஞ்சுவதைப் பார்த்த மன்னன் அவரை அவரின் தயக்கத்துக்கான காரணம் கேட்டார். அப்போது மருத்துவர் நடந்த விடயங்களைக் கூற அந்தச் சதிகாரன் பிடிக்கப்பட்டு தண்டனை வழங்கப் பட்டது. மன்னன் மற்றவர்களைப் பார்த்து இனிமேலும் துறவியைப் பார்த்துச் சிரிக்காதீர்கள். என்றான்.—

## திருவாசகத்தால் அசைந்த குழந்தை

ஜெர்மனியைச் சேர்ந்த தம்பதிகள் அவர்கள். நிறைமாதத்தை எட்டும் தறுவாயில் மனைவி. ஆனால் வயிற்றில் சிசுவின் அசைவையே உணர முடியவில்லை. பேர்லின் மருத்துவ மனையில் புகழ்பெற்ற மருத்துவர் ஒருவரிடம் போய் பரிசோதனை செய்துள்ளனர். அவரும் பல சோதனை கள் செய்து பார்த்துவிட்டு குழந்தையின் அசைவின்மைக்கு காரணம் தெரியவில் லை என்று கூறிவிட்டார். ஆனால் பிள்ளைக்கு உயிர் இருக்கிறது என்று கூறினார். பெற்றாருக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. மருத்துவர் மருத்துவராகப் பார்த்துக் களைத்து விட்டார்கள். ஒரு மன ஆறுதலுக்காக இளையராஜாவின் திருவாசக இசையை மன நிம்மதிக்காகப் போட்டிரு க்கின்றார்கள்.

என்ன ஆச்சரியம்.! சில நிமிடங்களில் வயிற்றில் ஒரு அசைவு தெரிந்துள்ளது. இசையை நிறுத்தியதும் அந்த அசைவு நின்றுவிட்டது. தொடர்ந்து பலமுறை இப்படிச் செய்து பார்த்தார்கள். ஒவ்வொரு தடவையும் குழந்தை அசைந்தது. ஆச்சரியத்துக்குமேல் ஆச்சரியம். வைத்தி யர்களால் இதனை நம்ப முடியவில்லை. வைத்தியர்களுக்கு முன் இசை போடப்பட்டுப் பரீட்சிக்கப்பட்டது. வைத்தியர்கள் மூக்கில் விரலைவைத்து வியந்தார்கள்.

இதன்பின்பு அந்த வீட்டில் எப்போதும் திருவாசக இசையே ஒலித்துக் கொண்டிருந்தது.

ஜெர்மனிய மருத்துவர்கள் பலரும் இந்த இசை அற்புதத்தை ஒப்புக்கொண்டதோடு திருவாசகம் இறுவெட்டை வாங்கி மொழி புரியாவிட்டாலும் அந்த இசையைக் கேட்டுக் கிறங்கிக் கொண்டிருக்கின்றார்கள்.

சரியாகப் பத்துமாதம் குழந்தை ஆரோக்கியமாக அதுவம் அறுவைக்கு அவசியமின்றி சாதாரணமாகவே பிறந்து மருத்துவர்களையே வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

இது கதைபோல் இருந்தாலும் உண் மையில் நடந்த ஒன்றே.

(இப்படி ஏதாவது உண்மை நிகழ்வுகள் உங்கள் பகுதிகளில் நடந்தால் தயவு செய்து அதனை திருவருளுக்குத் தெரியத்தாருங்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமாவில் கமலின் பார்ப்பனிய பயங்கரம்

சினிமாவை ஆய்வுக் கண்கொண்டு பார்க்கின்ற ஒரு எழுத்தோட்டம் இன்று நிலவுகின்றது. சினிமாவை நெடுங் காலமாக ஆக்கிரமித்துத் தங்கள் வக்கிரமான தமிழ் எதிர்ப்பினை காட்டாமாக வெளியுலகத்துக்கு அள்ளி வீசிக்கொண்டிருப்பவர்கள் இந்தப் பார்ப்பனிய வர்க்கத்தினர். இவர்கள் இதற்காகப் போட்டுக் கொண்டிருக்கின்ற முக மூடிதான் ஆலயத்துப் பூசாரி-வேடங்கள்.

தமிழ்ச் சினிமாவில் பார்ப்பனர்களை மிகவும் அப்பாவிகளாக(???) காட்டு கின்ற ஒரு வழக்கம் பல ஆண்டு களாகவே நடைமுறையில் உள்ளது. இதற்குக் காரணம் பெரும்பாலான தயாரிப்பாளர்களும் இயக்குனர்களும் பார்ப்பனர்களாக இருந்ததே.

இதற்கு ஒரு அடிப்படையான காரணமும் உண்டு. தமிழர்கள் பல ஆண்டுகளாக பார்ப்பனியர்களால் அடக் கப்பட்டு அடிமைகளாய் இருந்த அந்த சிறைத் தன்மையைப் புரிந்து கிளர்ந்து விழிப்புணர்வு பெற்றமை தமிழ்நாட்டில் பலவிதமான அரசியல் மாற்றங்களை உண்டு பண்ணியது. ஆனால் இந்த வரலாற்று உண்மையினை ஏற்றுக் கொள்ள முடியாத பார்ப்பனர்கள் வலிந்து உருவாக்க முனைகின்ற மாயமானின் ஒரு வடிவம்தான் சினிமாக்களில் பார்ப்பனர்களை அப்பாவிகளாகக் காட்டுவதாகும்.

அதாவது ஒரு மக்கள் கூட்டத்தைக் கேவலப்படுத்தி அடக்கி வைத்திருந்த அடக்கு முறையாளர்களை தனிமனித அப்பாவிகள் என்று காட்டுகின்ற ஒரு அரசியல் இங்கே ஒளிந்திருக்கின்றது.

சில ஆண்டுகளுக்கு முன்புவரை பார்ப்பனர்களை சூழ்ச்சி மிக்கவர்களாகவும் சமூக அக்கறை அற்றவர்களாகவும் சித்தரித்த கமல் தற்பொழுது பார்ப்பனர்களைத் தொடர்ந்து அப்பா விளாகவே சித்தரித்து வருகின்றார். இதனுடைய உச்சக்கட்டமாக வசூல்ராஜா திரைப்படத்தில் வந்த காட்சி அமைந்தது. கமல் படிக்கும் மருத்துவக் கல்லூரியில் ஒரு அப்பாவி இளைஞனை மூத்த மாணவர்கள் பகிடிவதை செய்ய முனைவார்கள். அந்த அப்பாவி இளைஞனின் சட்டையைக் கழற்றி விட்டு அவனை நடனம் ஆடச் சொல்வார்கள். சட்டை கழற்றப் பட்ட அந்த அப்பாவி இளைஞனின் மேனியை பூணூல் அலங்கரித்திருக்கும்.



உண்மையில் அந்தக் காட்சியில் பூணூல் வரவேண்டிய எந்த அவசியமும் இல்லை. பூணூல் அணியாமல் கூட ஒரு அப்பாவி இளைஞனை சித்தரித்திருக்க முடியும். உண்மையான அப்பாவிகள் பூணூல் அணியாதவர்கள்தான். ஆனால் கமல் அங்கே பூணூலைத் திணிக்கிறார். கமல் தன்னையும் ராக்கிங் செய்யச் சொல்வார். மாணவர்கள் அமைதியாக இருப்பார்கள். உருத்திராட்சக் கொட்டை அணிந்த வனை மட்டுந்தான் செய்வீர்களா என்று ஒரு கேள்வியைக் கேட்பார். பின்பு தன் புஜபலத்தைக்காட்டி ராக்கிங் செய்த மாணவர்களையே ராக்கிங் செய்துவிட்டு பூணூல் அணிந்த அப்பாவியிடம் கமல் சொல்வார் கவலைப்படாதே நான் இருக்கிறேன் என்று.

வசூல்ராஜாவின் இயக்குனர் சங்கரோ, மணிரத்தினமோ இல்லை என்பதாலோ இந்தக் காட்சி சொல்கின்ற அர்த்தம் மாறிவிடப்போவதில்லை.

கமல் தயாரித்த நளதமயந்தியிலும் மாதவன் ஒரு அப்பாவிப் பார்ப்பனர்தான் என்பதையும் இங்கே கருத்தில் எடுத்துக் கொள்ளவேண்டும். கமல் கடவுளை நம்பாதவராக இருக்கலாம். ஆனால் பார்ப்பனியம் கொண்டிருக்கும் முகங்களில் பலவற்றை கமலும் கொண்டிருக்கின்றார் என்பதுதான் இங்கு பிரச்சினை. கமலை ஒரு முற்போக்குவாதி என்று சொல்பவர்கள் இதனை மறுத்து பல உதாரணங்களைக் காட்டக்கூடும். கமல் பெண்கள் பாலியல் போன்ற விடயங்களில் முற்போக்காகச் சிந்திப்பவர் என்று பலர் நினைக்கிறார்கள். நாயகன் திரைப்படத்தில் கமல் பாலியல் தொழில் செய்கின்ற ஒரு பெண்ணை திருமணம் செய்வதாக வருகின்ற காட்சியை உதாரணமாகச் சொல்பவர்கள் இருக்கின்றார்கள்.

இப்படியான காட்சிகளின் மூலம் தமிழ் சினிமா கொண்டிருக்கும் உழுத்துப்போன பாரம்பரியங்களை உடைப்பதற்கு கமல் முயல்கின்றார் என்கின்ற கருத்து பலரிடம் உண்டு. ஆனால் இந்தக் காட்சிகளை நாம் சற்று ஆழமாகப் பார்க்கவேண்டும். இந்தக் காட்சிகள் பார்வையாளர்களின் மனதில் எவ்வித அதிர்வுகளையோ நெருடல்களையோ ஏற்படுத்தவில்லை. வெகு இயல்பாக பார்வையாளர்கள் இந்தக் காட்சிகளை ஏற்றுக் கொள்கிறார்கள்.

நாயகன் திரைப்படத்தில் பாலியல் தொழில் செய்யும் பெண்ணை திருமணம் செய்பவன் ஒரு தாதா. கடத்தல்களையும் கொலைகளையும் செய்கின்ற ஒருவன். அதாவது சட்ட விரோத தொழில் செய்கின்ற ஒருவன் சட்ட விரோத தொழில் செய்கின்ற ஒரு பெண்ணை திருமணம் செய்கின்றான். சோடிப் பொருத்தம் சரியாக இருக்கின்றது. பார்வையாளனும் இயல்பாக அதை ஏற்றுக் கொள்கின்றான். கடத்தல்காரன் ஒரு பாலியல் தொழிலாளியை திருமணம் செய்கின்ற காட்சியே அங்கே முன்னிற் கின்றது. இதில் எங்கே இருக்கின்றது புரட்சி?

கமல் தன்னை வித்தியாசமாகக் காட்டிக்கொள்ள முயன்றாலும் கடைசியில் பொதுமைப்படுத்தப்பட்ட சிந்தனையோடு தன்னைச் சமரசம் செய்து கொள்கின்றார். கமல் பலரால் போற்றப்படுவதற்கு காரணமான எத்தனையோ விடயங்கள் உண்மையில் அப்படி அல்ல என்பதைச் சுட்டிக்காட்டவே சில படங்களின் உதாரணங்களைக் கூறினேன். தசாவதாரம் படத்தின் மூலம் பார்ப்பனிய நலன் சார்ந்த ஒரு அரசியலுக்கு கமல் துணை போகின்றார்..

(இன்னும் வரும்....

**வி. சபேசன்(yarl.com)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எமது சிறுகதை*

# லண்டன் நகரத்து வீதிகளில்....



*கரவை மு. தயாளன்*

நிலைமை விபரீதமாகுமென்று யாருமே நினைத்திக்கவில்லை. சிறிய சம்பவம்தான். வாக்குவாதம் வாய்ச்சண்டையோடு நின்றிருக்கவேண்டும். ஆனால் அது கைகலப்பில் தொடங்கி விபரீதமான எல்லைக்குச் சென்றுவிட்டது. இதற்கான காரணகர்த்தா சடுதியாக மறைந்துவிட்டார்.

கமலன், அகிலன், சிவந்தன் மூவரும் தலையில் கைவைத்துக் கொண்டிருந்தனர்.

"நீ அந்தக் கதையைத் தொடங்காமல் விட்டிருக்கலாம்" என்று சாந்தன் சொன்னான்.

"நான் என்ன வேணுமெண்டே சொன்னனான். அவன் கதைச்ச கதைக்கு மறுப்பாய்த்தானே சொன்னனான்." என்றான் அகிலன்.

"இல்லை மச்சான் நான் கவனிச்சனான் நீ தான் முதலிலை தொடங்கினனீ" என்றான் கமலன்.

"அப்ப உன்ரை கதையைப் பார்த்தால் நான்தான் எல்லாத்துக்கும் காரணம் எண்ட மாதிரியெல்லோ இருக்குது" சூடாகத்தான் கதைத்தான் அகிலன்.

"இப்ப நீங்கள் ரண்டுபேரும் ஏன்ராப்பா அடிபடிறியள். இருக்கிற பிரச்சினை காணாதெண்டு பிறகும் கிண்டிறியள்."

மற்ற இருவரும் வாயை மூடிக் கொண்டனர்.

"ஊரிலை இருந்து ஒரு சிங்கள ஆமியை வெட்டினாலும் பிரயோசனம். இஞ்சை வந்து எங்கடை இனத்தவனையே வெட்டிப்போட்டு இருக்கிறம். கேடுகெட்ட வாழ்க்கை மச்சான்." சிவந்தன் உணர்ச்சி வசப்பட்டு வார்த்தைகளைக் கொட்டினான்.

"என்ன மச்சான் நீ சேம் சைட் போடிறாய்." கமலன் கோபமாகவும் கிண்டலாகவும் சிவந்தனைப் பார்த்துக் கூறினான்.

சிவந்தன் பதில் ஏதும் கூறவில்லை.

"நடந்ததைப் பற்றிக் கதைச்சுப் பிரயோனம் இல்லை. ஆர் கூட ஈடுபட்டதென்று அலசிறதிலையும் அர்த்தமில்லை. மூண்டுபேரும் சேர்ந்துதான் செய்தனாங்கள். வாறதை மூண்டு பேருமே அனுபவிப்பம்." என்றான் அகிலன்.

"இப்ப என்ன செய்யிறதெண்டதைப் பற்றிக் கதைப்பம்." என்றான் கமலன்.

"ஓ... இப்ப ஒரு பெரிய ஆமிக்காம்ப் தானே அடிச்சிருக்கிறம். அடுத்த திட்டத்தைப்போட" என்றான் நையாண்டியாக சிவந்தன்.

கமலனுக்குக் கோபம் வந்துவிட்டது . அடக்கிக் கொண்டான்.

அகிலனது வாய் சில தகாத வார்த்தைகளை மெதுவாக வெளியிட்டது.

சிறிது நேரம் மௌனம். மூவரும் எதுவும் கதைக்கவில்லை.

இவர்கள் மூவரையும் தேடி இன்னும் சிலநிமிடங்களில் லண்டனது காவற்றுறை வரப்போகிறது. வழக்கமாக இப்படியான சந்தர்ப்பங்களில் இளவட்டங்கள் ஓடி ஒளிந்து விடுவார்கள். வழமைக்கு மாறாக இம் மூவரும் பேசாமல் இருந்தனர். அதற்காக இவர்கள் மூவரும் நேர்மையானவர்கள் என்றும் இல்லை. இவர்களுக்கு இப்படியான சந்தர்ப்பங்கள் ஒன்றும் புதியனவல்ல. லண்டன் காவற்றுறை இவர்களுக்கு அத்துப்படி. ஓடிஒளிவது அர்த்தமற்றது என்றே நினைத்தார்கள்.

இம்முறை இவர்கள் செய்தது ஒன்றும் சின்னக்காரியம் இல்லை. சின்னச் சின்னக் காரியங்களாகத் தொடங்கி இன்று பெரிய காரியத்தைச் செய்து விட்டு நிற்கிறார்கள். கடல்கடந்து வந்து தஞ்சம் கேட்டு ஒரு பகுதியில் வாழத் தொடங்கிய இவர்கள் சொந்த நாட்டில் உறவினர்களுமல்ல நண்பர்களுமல்ல.

வந்த நாட்டில் ஒரு அறையிலும் அகதிகளுக்கான விடுதியில் ஒன்றாகத் தங்கியதாலும் நண்பர்களானவர்கள்.

குணத்தில் எந்தவிதத்திலும் இவர்கள் ஒன்றுபட்டவர்கள் இல்லை. வித்தியாசமான குணநலன்களைக் கொண்ட இவர்கள் தாம் வதியும் இந்த இடத்தின் சண்டியர்களாக தம்மைத்தாமே அறிமுகப்படுத்திக் கொண்டவர்கள்.

அதற்கேற்ற விதமாக தம் உடைகளை மாற்றிக் கொண்டார்கள்.

இவர்களுடைய உடுப்பில் வர்ணங்கள் கூடுதலாக இருக்கும். கழுத்தில் மூன்று நான்கு வெள்ளிச் சங்கிலிகளைப் போட்டிருப்பார்கள். அந்த வெள்ளிச் சங்கிலிகள் மிகத் தடிப்பானவையாக இருக்கும். காதுகள் இரண்டிலும் பெரிய கடுக்கன்கள் , ஊரில் பழைய ஆச்சிமார் போட்ட மாதிரி இருக்கும். அவர்களது கண்ணிமைகளில் கூட சிறுசிறு வெள்ளி வளையங்கள் தொங்கிக் கொண்டிருக்கும். கார் ஓட்டும்போது ஒரு பக்கம் சரிந்திருந்தே ஓட்டுவார்கள். தங்களுக்கென்று சில ஆயுதங்களையும் தேடிக் கொண்டார்கள். ஆயுதங்கள் எப்போதும் அவர்களின் காரின் பின் பக்கத்தில் வைக்கப்பட்டிருக்கும்.எப்படியும் இரண்டு மூன்று வாள்கள் மொத்தச் சங்கிலிகள், தடிப்பமான மரச் சட்டங்கள், கோடரிகள் என்று வைத்திருப்பார்கள்.

சூழ்நிலைக்கு ஏற்றமாதிரி ஆயுதங்களைப் பாவிப்பார்கள். இதில் என்னவென்றால் இந்த ஈனத் தொழிலைத் தாமாக வலிந்து ஏற்றுக் கொண்டவர்கள் அல்ல.

சில வேளைகளில் விரக்தியடைந்து இந்தத் தொழிலை விட்டுவிடுவோமடா என்று மூன்றுபேரும் ஒரு சமயத்தில் சிந்தித்த நாட்களுமுண்டு.

ஆனால் அவர்கள் விரும்பினாலும் 'இந்தச் சமூகம் அவர்களை விடவிடாது. அவர்களை அவர்களது செயல்களுக்காக தும்புபறக்க விமர்சிக்கும் இந்தச் சமூகம் அவர்களை இவற்றிலிருந்து நகர விடாது வைத்திருக்க விரும்புவதும் புரியாததாகவே உள்ளது.

வியாபார உலகில் பல தமிழர்கள் இந்த நாட்டில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றார்கள். இந்த வியாபார முதலாளிகளுக்கிடையிலான முரண்பாடுகள் போட்டிகள் ஏராளம். இந்த முரண்பாடுகளின் வெளிப்பாடாக இந்த இளைஞர்கள் அடியாட்களாக வாடகைக்கு அமர்த்தப்படும் துயரமான சம்பவங்கள் நிரம்ப உண்டு.

கை நிறையப் பணம். நாலுபேரை அடித்து நொறுக்குவதற்குக் கிடைக்கிறதென்றால் யார்தான் விடப்போகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதைவிட இந்தத் தொழிலுக்கு ஒரு அசாத்திய கௌரமும் உண்டு. இவர்களைக் கண்டால் எல்லாரும் ஒதுங்கிப்போவார்கள். இதில் இவர்களுக்கு மிகப்பெரிய சந்தோசம். இது எல்லாம் கௌரவம்தானே!!

லண்டன் ஆலயங்கள் மக்களின் பக்தி உணர்வைப் பகடையாக்கி உருவாக்க ப்பட்ட ஒருவகையான வியாபார ஸ்தாபனங்கள் என்பது உலகறிந்த உண்மை.

இந்த ஆலயங்கள் கூட தங்களின் பதவிப்போட்டிகளுக்குக் கூட இவர்களை வாடகைக்கு அமர்த்திய வெட்கங்கெட்ட சம்பவங்கள் ஏராளமாக உண்டு.

கமலன் எழுந்துபோய் ஒரு கிளாசில் தண்ணீர் வார்த்துக் குடித்தான்.

தண்ணீர் குடித்துக் கொண்டிருக்கும் போது மேசையில் கிடந்த கடிதம் அவன் கண்களில் பட்டது.

நேற்றுத்தான் அந்தக் கடிதம் வந்திரு ந்தது.

*... தம்பி கமலனுக்கு*

*சுகமாக இருக்கிறாயா? இங்கை அப்பாவுக்குச் சரியான வருத்தம். நெஞ்சிலை சளியென்று டாக்குத்தர் சொன்னவர். இங்கை வைத்திய வசதிகளும் சரியான குறைவுதானே! இனிமல் யாழ்ப்பாணத்துக்குப் போக வேணும். தங்கச்சி சோதினை நல்லாய்ப் பாஸ்பண்ணமிட்டாள். இங்கை சூழ்நிலை நல்லாய் இல்லைத்தானே. சரியான பயம். தங்கச்சி இயக்கத்திலை சேர்ந்திட்டாள். ஆமிரிட்டைப் பிடிபட்டுச் சாகிறதைவிட நாட்டுக்காகப் போராடிச் சாகிறது நல்லதென்று நானும் விட்டிட்டன். சிலவுக்குக் கையிலை பணமொண்டு மில்லை. நேற்று உன்ரை மாஸ்டர் கந்தசாமி வழியிலை கண்டவர். உன்னை விசாரிச்சவர். நீ பள்ளிக் கூடத்திலை இருக்கேக்கை விளையாட்டுக்காகவும் பள்ளிக் கூடத்திலை ஒழுங்காயிருந்த பையன் எண்டதுக்காகவும் வாங்கின பரிசில்களைப் பற்றிக் கதைத்தவர். நீ உங்கை பெரிய படிப்பெல்லாம் படிச்சுப் பெரியாளாய் வவாயெண்டு சொன்னவர். மறக்காமல் கொஞ்சம் காக அனுப்பிவி வை.*

*இப்படிக்கு*

*உன் அம்மா தங்கம்.*

கடிதத்தை வாசித்த கமலனின் கண்கள் கலங்கின.

கமலன் கண்கலங்குவதைப் பார்த்த சிவந்தன் எழும்பி அவன் அருகில் வந்தான்.

"என்ன மச்சான் அம்மா காசு அனுப்பட்டாமே". என்றான்.

"ஓம் மச்சான் இந்த முறை உள்ளுக்கை போனால் வாறனோ தெரியாது. அம்மா பாவம். தங்கச்சியும் இயக்கத்திலை சேர்ந்திட்டாளாம். அப்பாவுக்கும் சரியான வருத்தமாம்" என்றான் கமலன்.

சிவந்தன் எதுவும் பேசவில்லை.

"இந்த நாசம் பிடிச்ச வேலையைச் செய்யாமல் சும்மா சுப்பர் மார்க்கட்டிலை வேலை செய்திருக்கலாம்." என்று சினந்தான் அகிலன்.

"நாங்கள் தேவையில்லாமல் ஆற்றை யேனும் பிரச்சினைக்காகத் தெரியாத ஆரையோ அடிச்சு ... சீ என்ன பிழைப்பு.." சிவந்தன் விரக்தியின் எல்லைக்கே போய்விட்டான்.

"நாங்கள் கொலை செய்யிற அளவுக்குப் போயிருக்கக் கூடாது." என்றான் கமலன்.

ஆர் நினைச்சது இப்படி நடக்குமெண்டு அகிலன் கூறினான்.

"நாங்கள் செய்ததெண்டு ஆருக்குத் தெரியும்." என்றான் சிவந்தன்.

"நல்ல கதை கதைக்கிறாய் எங்களை ஒழுங்கு செய்த முதலாளியே பொலிசுக்கு அடிச்சுச் சொல்லியிருப்பான்." கமலன்.

ரெலிபோன் மணி அடித்தது.

மூவரும் இது பொலிசாய் இருக்குமோ என்று நினைத்தார்கள்.

அதனால் பேசாமல் இருந்தார்கள்.

ரெலிபோன் நின்றுவிட்டது.

திரும்பவும் அடித்தது.

சிவந்தன் துணிவாய்ப்போய் ரெலிபோனை எடுத்தான்.

மறுபக்கத்திலிருந்து பெண் குரல்.

சிவந்தனின் காதலி லலிதா.

"என்ன சிவந்தன் நான் கேள்விப்பட்டது உண்மையே"

"என்ன கேள்விப்பட்டனீர்."

"அந்த ராசதுரையை ஆரோ நடு ரோட் டிலை வைச்சு வெட்டிப் போட்டாங் களாம்"

"அப்பிடியே?" சிவந்தன் காட்டிக் கொள்ளவில்லை.

"என்ன அப்பிடியே என்கிறீர். சனங்கள் உங்கடை காங் என்றுதானே கதைக்கினம" என்றாள் லலிதா.

"சும்மா விசர்க் கதை கதையாதையும் ஆரும் செய்தால் எல்லாம் நாங்களே" சிவந்தன் விட்டுக் கொடுக்காமல் கதைத்தான்.

"நான் எத்தனை தடவை சொன்னனான் . உந்த அடிதடியிலிருந்து வெளியிலை வாருமெண்டு. கேட்டீரே. உம்மடை அண்ணன்மார் கேள்விப்பட்டால் எவ்வளவு கவலைப்படுவினம்."

"லலி போனை வையுங்கோ. நான் நேரிலை வந்து எல்லாத்தையும் சொல்லிறன்."

"ம்.. நேரிலை வந்தால் பார்ப்பம்."

லலிதா போனை வைத்துவிட்டாள்.

"ஆர் மச்சான் லலிதாவே" கமலன் கேட்டான்.

"ம்.. சனங்கள் வெளியிலை எங்களைப்பற்றித்தான் கதைக்குதுகளாம்". என்றான் சிவந்தன்.

"அப்ப எப்பிடியும் பொலிசுக்கு விசயம் போயிடும். இப்ப வந்திடுவாங்கள்". என்றான் அகிலன்.

கதவு தட்டிச் சத்தம் கேட்டது.

மூவரும் பயந்துபோய் ஆளைஆளைப் பார்த்தனர்.

பொலிசாயிருக்குமோ!

அகிலன்.... அகிலன்... என்ற கூப்பிடும் குரல் கேட்டது.

அகிலன் போய்க் கதவைத் திறந்தான்.

அகிலனின் அண்ணா தயானந்த மூர்த்தி நின்றிருந்தார். அவரை உள்ளுக்குவிட்டு கதவைப் பூட்டினான்.

தயானந்த மூர்த்தியின் முகம் இறுகிக் கறுத்திருந்தது. தயானந்த மூர்த்தி சமூகத்தில் கௌரவமாக வாழ்ந்து வருபவர். அவர் ஒரு பிரபல கணக்காளர். அவருக்கு இப்படியொரு தம்பி.

எத்தனை தடவை அவனுக்கு அவர் புத்திமதி சொல்லியிருப்பார்.

அவன் அவர் சொல்லும்போது தலையாட்டுவான் மற்றும்படி தான் நினைச்சதையே செய்வான்.

தயானந்த மூர்த்தியும் அலுத்துப்போய் எக்கேடும் கெட்டுப்போ என்று விட்டுவிட்டார். இப்போ மனங்கேட்காமல் வந்திருக்கிறார்.

அவன் தலையைக் குனிந்தபடி நின்றிருந்தான்.

"இப்ப என்ன செய்யப் போகிறியள்?"

பதிலில்லை.

"எத்தனை முறை சொல்லியிருப்பன் கேட்டியளே!"

யாருமே பதிலளிக்கவில்லை.

"இப்ப முழுசி என்ன பயன். வெள்ளம் தலைக்குமேலை போயிட்டுது. அந்த ராச துரையர் உங்களுக்கு என்ன செய்தவர். அவர் மனிசியும் பிள்ளையளும் போடிற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாபம் உங்களை விடாது."
யாரும் பதிலளிக்கவில்லை.

ராசதுரையைக் கொல்லச் சொன்ன முதலாளி இப்ப வந்து காப்பாத்துவாரே மூவரும் ஆளைஆள் பார்த்துக் கொண்டனர்.

எனக்கு இப்ப என்ன செய்யிறதெண்டே தெரியேல்லை. என்று தயானந்த மூர்த்தி கூறியபோது அவரது கண்களிலிருந்து கண்ணீர் பொலபொலவென்று வழிந்தது. சிறிது நேரம் அகிலனையே கண் வெட்டாமல் பார்த்துக் கொண்டிருந் தயானந்த மூர்த்தி எதுவுமே கூறாமல் வெளியே போய்விட்டார்.

அவர் சென்ற சில நிமிடங்களில் மீண்டும் கதவு தட்டப்பட்டது.

சிவந்தன் போயக் கதவைத் திறந்தான். வெளியே பொலிசார் நின்றிருந்தனர்.

## சேவையே மூச்சாய்க் கொண்ட செந்தமிழ்த்தாய் தங்கம்மா அப்பாக்குட்டி



சைவத்துக்கும் தமிழுக்கும் பேச்சளவில் இல்லாமல் நிஜமாகவே சேவைபுரிந்த சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களது இழப்பு ஈடுகட்ட முடியாத ஒன்றாகும். சேவை என்றால் என்ன என்று புரிய வைத்த தாய் இவர். மேற்குலகத்தில் ஒரு தாய் ரெரேசா எப்படிச் சேவை புரிந்தாரோ அதற்கு மேலாக எங்கள் அன்னையும் சேவை புரிந்திருக்கிறார் என்றால் மிகையாகாது.

ஆரம்பத்தில் சிறந்த பக்தி ரசம் ததும்பப்பேசும் ஆன்மிகப் பேச்சாளராகப் பரிணமித்த அன்னை அவர்கள் காலத் தோடு சேர்ந்து வளர்ந்து தமிழினத்தின் அன்னையாகி கனிவு நிறைந்த சேவையாளராக உருவாகியமை இறை வனின் கருணையன்றோ. அன்னையின் ஆன்மாஇறைவன் பாதாரவிந்தங்களில் அமைதியடையப் பிரார்த்திப்போமாக.

# இந்துவாய் வாழ்ந்து இந்துவாய் சேவை செய்து இந்துவாய் மறைந்த சுவாமி தந்திரதேவா



அமெரிக்க நாட்டு இந்துமதத் துறவியும் அகில இலங்கை இந்து மத அபிவிருத்திச் சபைத் தலைவருமான ஸ்ரீமத் சுவாமி தந்திரதேவா மகராஜ் கடந்த திங்கட்கிழமை அதிகாலை 3.00 மணிக்கு அவருடைய 58 ஆவது வயதில் இறை பதம் அடைந்தார். Lwrence Anthony Schafaka என்ற இயற் பெயரைக் கொண்ட சுவாமிகள் அமெரிக்காவில் உள்ள ஹவாயத் தீவில் பென்சில்வேனியா என்னுமிடத்தில் 1950 ஆம் ஆண்டு பிறந்தார். மிக இளவயதிலேயே இந்து மதத்தில் நாட்டங்கொண்டு இந்தியா சென்று தமிழையும் சமஸ்கிருதத்தையும் கற்று தந்திரதேவா என்னும் துறவிப் பெயர் பூண்டு இந்துமதத் துறவியானார். இந்துமதம் என்பது மக்களுக்கான சேவையினை அடிப்படையாகக் கொண் டதே என்பதைத் தெளிவாகப் புரிந்து கொண்ட சுவாமிகள் மக்கள் சேவையினை முழுமூச்சாகக் கொண்டு செயற்படத் தொடங்கினார். இலங்கையின் திருகோணமலையைத் தெரிவு செய்து அங்குள்ள அழகான உவர் மலைப்ப குதியில் ஆச்சிரமம் அமைத்து சேவையாற்றத் தொடங்கினார். ஏராளமான சமயச் சொற்பொழிவுகளை ஆற்றினார். சுவாமிகள் இரண்டு முக்கியமான சந்தர்ப்பவாதக் கொள்கைகளுக் கெதிராகச் செயற்படத் தொடங்கினார். எம்மதமும் சம்மதம் என்று சந்தர்ப்பவாதம் பேசி சமூகத்தை வேரறுத்துக்கொண்டிருந்த சந்தர்ப்பவாதிகளுக்கெதிராகப் பிரச்சாரம் செய்தார். கிராமம் கிராமமாகச் சென்று ஆன்மீக அறிவினைப் புகட்டினார். அனாதை இல்லங்களை அமைத்து அவற்றைப் பராமரித்தார். ஆலயத் திருப்பணிகளுக்கும் அறநெறிப் பாட சாலை மாணவர்களுக்கும் விதவைப் பெண்களுக்கும் வறிய மாணவர்களுக்கும் வேண்டிய உதவி புரிந்து தன் பணியைச் செவ்வனே செய்தார். எண்ணம் சொல் செயல் ஆகிய மூன்று செயற்பாடுகளிலும் இந்து ஒருவன் உண்மையான இந்துவாக வாழவேண்டும் என்பதை வாழ்ந்து காட்டியவர் சுவாமிகள். இளமைக் காலத்தில் தியானம் யொகாசனம் போன்ற பயிற்சிகள் பெற்றதன் பயனாக சிதம்பரம் வீரமாமுனி என்பவரிடம் தமிழ், சமஸ்கிருதம் கற்றுத் தேர்ந்தார் திருச் செந்தூரில் மூன்று வருடம் சைவாகமம், வேதாகமம் கற்றார்.


இலங்கையில் சுனாமி தாக்கியபோது சுவாமிகளின் பணி அளப்பரியதாக இருந்தது. இலங்கையின் வரலாற்றில் இந்து சமயத் துறவி ஒருவர் ஆகக்ககூடுதலான கிராமங்களுக்கு விசயம் செய்தது சுவாமிகளே.

இவரது இறுதி ஆசை இலங்கை மண்ணில் உயிர் நீத்தபின் தனது உடலை எரிக்கவேண்டும் என்றும் தான் தவமியற்றிய ஹவாய்த் தீவு, இந்தியாவின் சிதம்பரம், திருச் செந்தூர் ஆகிய இடங்களிலும் தான வாழ்ந்த கோணே சர்பூமி, மாமாங்கம் மட்டக்கிளப்பு , தேற் றாத்தீவு, அம்பாறை ஆகிய இடங்களில் அஸ்தியைக் கரைக்கவேண்டும் என்ப தாகும்.

சுவாமியின் சமூக சமயப் பணி என்றென்றும் போற்றப்படவேண்டி யவை.சமயப் பணியினூடான பொதுச் சேவையையும் வழங்கி மக்கள் மத்தியில் மறுமலர்ச்சியை ஏற்படுத்திய மேன்மை யாளர். அன்னாரது இழப்பு ஈடு செய்ய முடியாத ஒன்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# WESTERN JEWELLERS



**OPENNING HOURS**
**Monday to Saturday 10.00am - 6.30pm**
**Sunday 11.00am - 5.30pm**

**230, UPPER TOOTING ROAD**
**LONDON SW17 7EW**
**PHONE: 0208 767 3445**



# SILK EMPORIUM

**122 UPPER TOOTING ROAD**
**LONDON SW17 7EN**
**PHONE: 0208 672 1900**

# WESTERN JEWLLERS & TEXTILES

**5 PLAZA PARADE, 29-33 EALING ROAD WEMBLEY, MIDDLESEX HA0 4YA PHONE: 0208 903 0909**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org